ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை அனுமதித்து, இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், திரு. சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பிய பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. என்னுடைய கருத்தை ஒரு நிமிடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு உறுப்பினர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடிந்துவிட்டப் பிரச்னை. இப்பிரச்னை கிளப்பப்பட்டு, விளக்கம் கொடுக்கப் பட்டு விட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

[முற்பகல் 10-10]

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் எனது தீர்ப்பு.

நேற்று (30—3—1979) திரு. சுப்பு அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார். இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பு :

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்தே காவல்துறை தலைமை அதிகாரி அத்துறை குறித்த சீரமைப்பு பற்றி விளக்கம் அளித்தார் என்பது புலனாகிறது. எனவே, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தீர்ப்புக்கு மேல் அப்பீல் கிடையாது. அப்படி இருக்கும்போது கொஞ்சம் நிதானமாக தீர்ப்பைக் கொடுக்கக் கூடாதா ? இப்படி ஓட வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களைப் பற்றித் தெரியும். அதனால்தான் அவசரம் அவசரமாக **படித்தேன்.

உரிமைப் பிரச்சினைகள்

திரு. மு. அம்பிகாபதி : நீங்கள் ** குறிப்பிட்டது குறிப்பேட்டில் இருக்க வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரமாக ** என்பது வேகமாகப் படித்தேன் என்ற அந்தக் கருத்துக்கு உட்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி : நான் புரிந்து கொண்டேன். வெளியில் இருப்பவர்கள் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கும்.

திரு. கு. ரமணி : புரிய முடியாத வேகத்தில் தலைவர் அவர்கள் வாசித்தார்கள் என்ற கருத்துக்கு இடம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி புரிந்து கொண்டதாகத்தான் கூறினார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ** என்று சொன்னதால் தாங்கள் பேரவைத் தலைவர் பதவியை விட்டு அமைச்சரவைக்குப் போவதாக இருக்கக்கூடிய தகவல் சரியானதாக இருக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே திரு. துரைமுருகன் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோதே தெரிவித்தேன். உங்களுக்கு நான் இங்கே இருப்பது பிடிக்கவில்லை என்றால் தாராளமாகப் பேசுங்கள். நான் இங்கேதான் இருக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : போலீஸ் ஐ. ஜி. பற்றிய உரிமைப் பிரச்சினையில் தாங்கள் தீர்ப்பைப் படிக்கிறபோது திரு. சுப்பு பேசுகிற வேகத்தைவிட அதிகமாக இருந்தது. என்னால் கூட அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை மறுபடியும் படித்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று (30—3—79) திரு. சுப்பு அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார். இப்பிரச்சினை குறித்து எனது தீர்ப்பு:

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்தே காவல்துறை தலைமை அதிகாரி அத்துறை குறித்த சீரமைப்பு பற்றி விளக்கம் அளித்தார் என்பது புலனாகிறது. எனவே, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.